திரு. வே. சிவக்கொழுந்து
அவர்கள் எழுதிய
தமிழ் பாடகணிதம்
அல்லது
— எண் கணிதம் —
பிரதி விலை ரூபா 3.
ஆசிரிய பரீட்சை, ஆசிரிய பயிற்சிப் பிரவேசபரீட்சை மற்றும் தமிழ் உயர்தர பரீட்சைகளுக்குரியது பிரபல புஸ்தகவியாபாரிகளிடம் பெறலாகும்,
பிரசுரம்:
வடலங்கா புத்தகசாலை
பருத்தித்துறை—POINT PEDRO.


# இந்துசாதனம்

செவ்வாய், வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலைமதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்,
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 19/300 of 1939

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் திகதி ஆரம்பமானது.


"சம்பாஷணைச் சிங்களம்"
[ II-ம் புத்தகம் ]
ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஆசிரியர் உணவட்டுனே — சுவாமி குணரத்தன எழுதியது
[ விலை சதம் 80.
· ஸ்ரீலங்கா புத்தகசாலை ·
காங்கேசன்துறைத்தெரு யாழ்ப்பாணம்
[Std. 46. 2-4—30-4-49.]

புத் —சுo ] யாழ்ப்பாணம்:— சர்வதாரி வருடம் மார்கழி மீ கசு உ (1948 டிசம்பர் 28 செவ்வாய்க்கிழமை) [ இல. — எக.]

# யாழ்ப்பாணத்திற் சைவ சித்தாந்த சமாஜம் 43-வது ஆண்டு விழா

## இளைஞர் மாநாட்டில் வரவேற்புரை

[ திரு. மு. ஞானப்பிரகாசம் B. A., B. Sc. அவர்கள் ]

*சென்றகாலத்தின் பழுதிலாத்திறமும் இனிஎதிர்காலத்தின் சிறப்பும்*
*இன்றெழுந் தருளப்பெற்ற பேற்றினால் எற்றைக்குந் திருவருளுடையேம்*
*நன்றியில் நெறியில் அழுந்தியநாடும் நற்றமிழ் வேர்தனும் உயர்ந்து*
*வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும்மேன்மையும் படைத்தனம் என்பார்.*

— பெரியபுராணம்.

சைவசித்தாந்த சமாஜத்தாரின் 43-வது ஆண்டு நிறைவு விழாவை எம் நாட்டில் நடாத்துவிக்கத் திருவுளங் கொண்ட எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை மனமொழி மெய்களால் வழுத்துகின்றோம். ஆண்டுவிழாவை நடத்துவதற்கு இங்கு எழுந்தருளி வந்திருக்கும் தாய்நாட்டுச் சைவப் பேரன்பர் அனைவர்க்கும் நல்வரவு கூறுகின்றோம்.

நம் நாடு ஈழம். நம்நாட்டுச் சரித்திரம் தாய்நாட்டுச் சரித்திரத்திலிருந்து பிரிக்க முடியாதது. மிகவும் பழைய இராமாயண காலத்தில் இலங்கையர் கோனாயிருந்து இலங்கையை அரசாண்டு வந்தவன் இராவணன். அவன் சிறந்த சிவபக்தன். சாமவேதம் பாடுவதில் வல்லவன். அவன் இன்னிசை கேட்டுச் சிவபிரானார் அவனுக்குக் 'கோலவாளொடு நாளது கொடுத்தார்' என்று அவனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதிக்கின்றார். அவன் திருக்கைலாயம் தூக்கிய கதையையே 'மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின் கண்ணுதலான் தன்கருணை கைக்கொள்ளும் என்னும் உண்மையை உணர்த்துவதற்கு' திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பதிகங்கள்தோறும் கூறிச் செல்கின்றார். எனவே இலங்கையர் கோனாகிய இராவணன் சரித்திரத்தில் எங்களுக்கு மிக முக்கியமான பகுதி, 'சிவபிரானார் சந்நிதியில் அவன் தன் குற்றங்களை நினைந்து நினைந்து மனமுருகி நிற்கும்' பகுதியேயாகும். பேரரசனாகிய அவனிடத்தில் இருந்த சிவநெறியும் அவனிடத்தில் இருந்த பண்பாடும் அவன் குடிமக்களாகிய எம்நாட்டு ஆதி மக்களிடத்திலும் இருந்திருக்கவேண்டும் என்பது ஒருதலை. எனவே கிறீஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே எம்நாடு தாய்நாட்டைப் போலவே சிவநெறிபற்றி ஒழுகியநாடு என்பது பெறப்படும். அக்காலத்தில் கீழ்த்திசையில் திருக்கோணமலை என்னும் திருப்பதியும் மேற்றிசையில் திருக்கேதீச்சரம் என்னும் திருப்பதியும் எம் சமயத்தைப் பாதுகாக்கும் இரு பெரும் அரண்களாக விளங்கின. தாய்நாட்டில் விசுங்காற்று சேய்நாடாகிய எம் நாட்டில் வீசாமல் விடுவதில்லை. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் தாய்நாட்டிற் புத்தசமய எழுச்சி ஏற்பட்டதல்லவா? அக் காலத்திற்றான் புத்தசமயமும் எம் நாட்டிற்கு முதன் முதலாகக் கொணடுவரப்பட்டது. புதிதாய் வந்த சமயம் ஈழத்தின் தென்றிசை முழுவதும் பரவியது. திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் ஆகிய இரு பெரும் அரண்களும் ஈழத்தின் வடபகுதியைப் புதிதாய் வந்த சமயத்திலிருந்தும் பாதுகாத்தன. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளிலிருந்த எம் சமயாசாரியர்கள் தாய்நாட்டிலிருந்து சேய்நாட்டினராகிய எம்மையும் நினைந்தருளி எம் சிவாலயங்கள்மீது பாடல்கள் பாடிய தன்மையினாற்போலும் அடுத்துவந்த நூற்றாண்டுகளில் தமிழ் மக்களாகிய நாங்கள் எங்கள் பொற்காலம் என்று புகழக்கூடிய, அக்காலத்தில் கங்கைகொண்ட சோழனால் மத்திய இலங்கையிற் பொல்லனறுவையில் மாதேவனீச்சரம் என்னும் பிரமாண்டமான சிவாலயம் எழுப்பப்பெற்றது. அதனால் அக் காலத்தில் ஒரு நூறாண்டுகள் வரையில் ஈழத்தின் தென்பகுதியிலும் சிவநெறி ஆதிக்கம்பெற்றே இருந்தது எனக் கூறவேண்டும். அக் காலத்திற்றான் ஈழத்தின் தென்கோடியில் கதிர்காமம் என்னும் முருகன் ஆலயம் கட்டிடமென்ற முறையில் அமைக்கப்பெற்றது போலும். ஈழத்தின் தென்பகுதியில் பல மாறுதல்கள் நடந்துவர, ஈழத்தின் வடபகுதியாகிய யாழ்ப்பாணம் இறைவனருளால் 15-ம் நூற்றாண்டுவரையில் ஒரு கலக்கமுமின்றி சிவநெறி ஒழுக்கத்திலே உறுதியும் உரமும்பெற்று வளர்ந்துகொண்டு வந்தது.

16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எம் நாட்டில் பறங்கியர் வியாபாரத்திற்கென்று கால்வைத்தனர். சிறிது சிறிதாக எம் நாட்டைத் தம் ஆட்சிக்குட் படுத்தினர். எங்கள் பரமன் கோயில்களை இடித்துத் தள்ளினர். தங்கள் சமயத்தையும் கொள்கைகளையும் மக்கள்மேல் திணித்தனர். 'உண்ணும் உணவிற்கு வீட்டுக்கொரு பசுவாகத் தரவேண்டும்' என எம்மூதாதையரை வற்புறுத்தினர். 'பூமாத்தின்கீழுடதிர்ந்த போதுகள்' கொண்டு சிவபிரானை அர்ச்சித்துவந்த அக்காலத்துச் சைவர்களுக்கு ஆவுரித்துத் தின்னும் பறங்கியருடன் சமரசத்திற்குவர இயலாதிருந்தது. முன்னொருபோதும் கலங்காத எம்நாடு கலங்கத் தொடங்கியது. பறங்கியரின் கொடுமைகளை ஆற்றமுடியாதவராய், ஈழத்தின் சிவநெறிக்கு என்னகதி ஏற்படுமோ என எண்ணி எண்ணி வருந்தியவர்களாய் எம் நாட்டிலிருந்து தாய் நாட்டைநோக்கிப் பல பெரியோர் சென்றனர். அவர்களுள் ஒருவர் யாழ்ப்பாணம், திருநெல்வேலி, ஞானப்பிரகாசர் என்னும் பெரியார். தாய்நாட்டில் வடமொழிப் புலமையும் தென்மொழிப் புலமையும் பெற்றுத் திருவண்ணாமலையிலே, ஆதீன மடத்திலேயிருந்து காஷாயம் பூண்டு சைவ சித்தாந்த ஞானநூல்களை ஆராய்ச்சி செய்தவர். சிவஞான சித்தியாருக்கு உரையெழுதியவர். சிவயோகசாரம் சிவயோக ரத்தினம் முதலிய வடமொழி நூல்களைச் செய்தவர். சிதம்பரத்திலுள்ள ஞானப்பிரகாசர்குளம் தோண்டியவர் இவரேயாவர். பறங்கியர் வருகையினாற் கலங்கத்தொடங்கிய எம்நாடு அதிகாரிகளுக்குத் தெரியாமற் சிவபிரானாரிடத்தில் அந்தரங்க வழிபாடு செய்வதும், புற வழிபாடின்மையாற் கலங்குவதும் ஏங்குவதுமாக எப்படியோ 100, 200 ஆண்டுகளைக் கடத்திக்கொண்டு வந்தது. ஆங்கிலஆட்சி எம் நாட்டிற்கு வந்தவுடன், அரசினரின் துணையைப் பக்க பலமாக வைத்துக்கொண்டு மேனாட்டிலிருந்து கிறீஸ்த மிஷனரிமார் லட்சக்கணக்கான பணத்தைக் கொண்டுவந்து எம்நாடு முழுவதும் வீசினர். எத்தனையோ சைவக் குடும்பங்கள் அந்தப் பணவலையிலே அகப்பட்டுக் கிறீஸ்தவ குடும்பங்களாயின. கிறீஸ்தவர்களாய் மாறியவர்கள் போக, எஞ்சியிருந்த சைவர்களும் திருநீறுவேண்டுமோ? பணம் வேண்டுமோ? என்று நிச்சயிக்க முடியாதவர்களாய்த் தத்தளித்துக்கொண்டிருந்தனர். அக் காலத்திலேயே நல்லூரிலே ஞானப்பிரகாசர் பரம்பரையிலே, நாவலர் அவதரித்தார். அவர், தம் வாழ்நாளிலே தம்மவர் பிறரென்று பாராது போலி ஒழுக்கங்களையும் போலி நெறிகளையும் கண்டனஞ்செய்த வரலாற்றை நாம் நன்கு அறிவோம். அவர் சிவநெறி வளர்ப்பதற்கென்று திட்டங்கள் அமைத்ததை நாம் நன்கு அறிவோம். தாய்நாடு சென்று அச்சியந்திரசாலை ஸ்தாபித்ததும், சிறுவர்க்கும் பெரியவர்களுக்குமான சைவ நூல்கள் எழுதி எங்கும் பரப்பியதும், சத் பிரசங்கங்கள் செய்ததும், சைவப் பாடசாலைகள் சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் ஸ்தாபித்ததும் ஆகிய இவை நாம் அவரைப்பற்றி நன்கு அறிந்த விஷயங்களாம்.

அஞ்சா நெஞ்சமும், தெளிந்த அறிவும், உறுதி வார்த்தையும், தூய ஒழுக்கமும் சேர்ந்த பெருவடிவமே நாவலர் வடிவம். செந்தமிழ்த் திருவும் சைவ மெய்த்திருவும் சேர்ந்த நாவலர் எனும் அந்தப் பெருவடிவமே எம் நாட்டிற்கும் தாய் நாட்டிற்கும் பலவேறு தமிழ் மணிகளையும் சைவ மணிகளையும் அளித்தது. தமிழருக்கு அகராதி அளித்த பெருஞ்சொற் கொண்டல் நா. கதிரவேற்பிள்ளை, தமிழ் நூல்களைப் பிழையறப் பதிப்பித்த செந்தமிழ்ப் பெரியார் சி. வை. தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் ஸ்ரீ அ. குமாரசுவாமிப் புலவர், திராவிடப் பிரகாசிகை ஆசிரியர் சபாபதி நாவலர் முதலியோர் ஆறுமுக நாவலர் வழிவந்த ஞானத்தவப் புதல்வர்களாம். இவர்களை யெல்லாம் இக்கால உலகம் மறக்கலாம். ஆனால் தமிழும் சைவமும் மறக்கவே முடியாது.

தாய் நாட்டிலும் எம் நாட்டிலும் வாழ்ந்த எம் முன்னோர் எமக்களித்த செல்வங்கள் இன்றைக்கு எம் மத்தியில் நின்று காட்சி யளிக்காமலிருக்கலாம், ஆனால் அவை அனைத்தும் எம் இரத்தத்தில் ஊறிப்போயிருக்கின்றன. எம் முன்னோரெமக்களித்த சிவநெறிச் செல்வத்தைப்பற்றி இப்பொழுது நினைவுகூர விரும்புகின்றேன்.

### எம் சமயம்

உலகெலாம் தனக்குள்ளே ஒடுங்க, தான்மாத்திரம் ஒன்றிலும் ஒடுங்காது நின்று வருங்கடன்மீள நல்வினை வாசித்து நிற்கும் பரம்பொருளே எம் லட்சியம், எம் கடவுள், எம் பரமேஸ்வரன். அப்பரம் பொருளை மெய்கண்டார் பரம்பரை 'ஒடுங்கி' என அழைக்கும். மாதவச் சிவஞான சுவாமிகள் 'மகாசங்கார காரணன்' எனக் கூறுவர். அந்தப் பரம்பொருளையே மூன்றும் வயசிலே எங்கள் ஆளுடையபிள்ளை 'காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங் கவர் கள்வன் இவனன்றே' எனச் சுட்டிக் காட்டியது.

அறிவும் ஆற்றலும் தெளிவும் துணிபும் பொருந்திப்பேருணர்விற் பொலிந்து விளங்கும் ஆன்மாக்களே இந்த ஒடுக்கத்தை வணங்கி வாழ வல்லவர்கள். இவர்களையே 'தீரர்கள்' எனச் சுருதி கூறும். இவர்களையே 'நின்றழியா விரத்தார்' என ஆசிரியர் சேக்கிழார் கூறுவர். இந்த ஒடுக்கத்தைப் பிரம விட்டுணுக்கள் நான்பிரமம் என்னும் இப்படி ஒரு உணர்வு தாங்கி மேலும் கீழ்ச்சென்று அளக்கமுயன்ற கதையைச் சைவ உலகம் நன்கு அறியும். எனவே ஒடுக்கத்தை வணங்குவதென்றால் எல்லார்க்கும் கை கூடுவதன்று. எம்மவருட் சிலர்க்கு எவ்வளவுதான் முயன்றாலும் எம்முயிருணர்வு உண்ணும் உணவிற்கு மேற் செல்வதேயில்லை. வேறு சிலர்க்கு அதுகாணும் காட்சிக்கு (World of Sense-data) மேற் செல்வதேயில்லை. இன்னும் சிலர்க்கு அந்த உயிருணர்வு கருதும் கருத்துக்கு (World of ideas) மேற் செல்வதேயில்லை. மற்றும் சிலர்க்கு அது கொள்ளும் குணத்திற்கு (World of Gunas) மேற் செல்வதேயில்லை. இவ்வாறு நாமெல்லாம் பல வேறு ஆற்றல்பெற்று, பல வேறு நிலைகளிலே தடக்குண்டு கிடக்கின்றோமாயினும் முற்கூறிய ஒடுக்கத்தை லட்சியமாக வைத்து அதற் கறிகுறியாகத் திருநீறு பூசி இருக்குமளவில் நாமெல்லாம் சைவர்களே. அல்லாக்கால் சைவர்களில்லை என அறிக. ஒடுக்கத்திலே தன்னறிவிலே சாக்ஷாத்கரிக்கப்படும் பரமேசுவரன் உலகிலுள்ள ஒவ்வொரு செயலிலும் விளங்கித் தோன்றவில்லையோ எனில், கருணையே வடிவமாக மிகவும் விளங்கித் தோன்றுகின்றான். ஒவ்வொன்றையும் எடுத்து ஊன்றிச் சிந்தித்துப்பாராத குறையினால் இந்த உண்மை எங்களுக்குப் புலப்படுவதில்லை; எங்களுடைய உடம்பொன்றையே எடுத்துச் சிந்தித்துப் பாருங்கள். கால் கைகளை நீட்டவும் முடக்கவும் தக்கவாகப் பொருத்துக்களை அங்கங்கே அமைத்து, அப் பொருத்துக்கள் தோறும் சிறுச்சிறு எலும்புத் துண்டுகளை ஆப்புப்போலச் செருகி அவையெல்லாம் கழன்றுபோகாதபடி நார்போன்ற நரம்பினாலே இறுக்கிக் கட்டிவைத்திருக்கும் இந்த அமைப்பினுள்ளே ஓர் கருணை மினுங்கிக் கொண்டிருக்கிறதல்லவா? வெளியி லுண்டாகும் சத்தத்தைக் கேட்பதற்கு இரண்டு செவிகளுக்கும் மத்தியில் மேளத்துக்கிடப்படும் தோல்போல ஒரு சவ்வை அமைத்து, அதற்குச் சத்தம் போகும் இரு துவாரங்களுள் கோயிருப்பின் ஈக்கு முதலிய வற்றால் அதற்கு அபாயம்சேர்ந்து விடுமென்று அவற்றைக் கோணலாயமைத்தும், சப்தங்களைத் திரட்டி உள்ளே அனுப்புவதற்காக இரு காதுகளின் மலர்களையும் வெளியிலே பரப்பி வைத்திருக்கும் அழகைச் சிந்திக்கும்பொழுது அந்தச் செவியுறுப்பினுள்ளும் அந்தக் கருணையே பதுங்கிக்கொண்டிருக்கிறதல்லவா? உடம்பினுள்ளே தண்ணீர், காற்று, நெருப்பு முதலிய பூதியங்களை அங்கங்கே அளவாக அமைத்து வைத்திருக்கும் பெற்றியை உன்னும்பொழுது ஆங்கும் அந்தக் கருணையே காணப்படுகின்றதல்லவா? நாக்கு என்னும் உறுப்பிலே உமிழ்நீர் ஊறும்படிசெய்து உருசி பார்க்கவும் நாக்கைப் புரட்டிப் பேசவும் வைத்த விசித்திரத்தைப் பார்க்கும்பொழுது கருணை எங்குதானில்லை என வியக்கின்றோமல்லவா? போக போக்கியங்களை நுகரத்தக்கமுறையில் எங்களுக்கு ஓர் உடம்பையுந் தந்து உலகம் நிரம்ப மண்ணென்றும், பெண்ணென்றும், பொன்னென்றும் போகப் பொருள்களையும் உண்டாக்கி எம்மை அவற்றிற் செலுத்தி அவற்றை நுகருவிக்கின்ற அந்தக் கருணைவன் லபத்தை உணரும் பொழுது, 'கருணைமட்டுப் பருகிக் களித்து

தொடர்ச்சி 4-ம் பக்கம்

---

உ

## தோத்திரம்

மாறுகொண்ட தக்கன் மனோரதமெல் லாந்தவிர்த்து
வீறுகொண்ட சோணகிரி வித்தகா—ஆறுகொண்ட
செஞ்சடையாய் நின்னைத் தெரிசித்தல் வேண்டுமென்கண்
பஞ்சடையா முன்னே பரிந்து.

தேவரீரோடு மாறுபட்ட தக்கன் கொண்ட நோக்கங்களை (ஆசைகளை) யெல்லாங் கெடுத்து அவனை (வீரபத்திரக்கடவுள் வாயிலாக) வென்றருளிய சதுரப்பாடுடையவரே, கங்கைநதியைத் தரித்த செந்நிறமான சடைமுடியையுடையவரே, தமியேனுடைய கண்கள் பார்வை குன்றுதற்கு முந்தியே பத்தியுடன் தேவரீரை அடியேன் தரிசனஞ் செய்தல் வேண்டும் என்பது பொருள்.

மாறுகொண்ட தக்கன்—தேவரீர் பரம்பொருளல்லவென நிந்தித்துத்தேவரீரைப் புறக்கணித்து யாகஞ்செய்ய முயன்ற (பிரமபுத்திரனாகிய) தக்கன்; அவன் கொண்ட மனோரதம் - தானே பரப்பிரமமாக வேண்டுமென்ற ஆசை; வீறு - வெற்றி; வித்தகன்-சதுரப்பாடுடையவன்; சர்வவல்லமையுடையவன்; கண்பஞ்சடைதல் - கட்பார்வை குன்றல்; இறைவனைத் தரிசித்தற்குக் கண்கள் இன்றியமையாதனவாதலின் "கண் பஞ்சடையாமுன்" என்றார். பரிந்து - பத்திகொண்டு; இக்கருத்து ஒருபுடையமையப் பட்டினத்தடிகளும்:-

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய்ப் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு. என்று பாடியிருத்தலைப் போற்றுக.

சிவ ஆஞ்ஞைப்படி செய்தமையினாலும், வீரபத்திர உருத்திர மூர்த்திக்குஞ் சிவத்திற்கும் பேதமில்லையாதலினாலும் வீரபத்திரர் செயலைச் சிவன்மேலேற்றிக் கூறுதல் மரபென்க. இறைவனைப் புறக்கணித்துத் தக்கன் தவஞ்செய்த யாகத்தை வீரபத்திரக்கடவுள் சிதைத்து அவன் சிரத்தைத் தடிந்து அவனைத் தண்டித்த வரலாற்றைக் கந்தபுராணம் தக்ஷகாண்டத்திற் பார்க்கக்காண்க. (9)

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே,


# இ ந் து சா த ன ம்

யாழ், சர்வதாரி ஞு மார்கழி மீ கசுஉ செவ்வாய்க்கிழமை


## 1948-ம் ஆண்டு

இந்த ஆண்டு முடிவதற்கு இன்னும் மூன்றுநாள் மாத்திரமுள்ளன; இவ்வேளையில் இவ்வாண்டிலே நிகழ்ந்த நன்மைகள் தேர்ந்த தீமைகளை யிட்டு ஞாபகத்திற் கெட்டிய வரை ஆராய்ந்து வெளியிடுதல் ஏற்புடைத்தாகுமென வெண்ணுகிறேம்.

உலக இரண்டாம் யுத்தம் முடிந்து இரண்டாண்டுகள் கழிந்துவிட்டன வெனினும் இந்த 48-ம் ஆண்டிலே சமாதான வாழ்வுக்காகிய நிகழ்ச்சிகள் முயற்சிகள் ஏதும்நடந்தன வென்று சொல்லுதற்கிடமில்லை; தத்தம் நாட்டின்மேற் பேரபிமானங்கொண்டு சமராற்றித் தோல்வியுற்றுச் சிறைப்பட்ட ஜர்மனியரை யுத்தக் குற்றவாளிகளெனக் குற்றஞ் சாட்டிச் சிலரை இந்த ஆண்டிலும், வென்றகட்சியார் தூக்கிவிட்டுக் கொண்டிருக்கின்றனர்; இற்றைக்குச் சில தினங்களுக்கு முந்தியே, யப்பானிய வீரர்களாகிய தோஜோ முதலிய அறுவர் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டனர். உலக மூன்றும் யுத்தமும விரைவில் நேருமோ என்ற சந்தேகமும் அச்சமும், கழிந்த ஆண்டுகளைக் காட்டிலும் இந்த ஆண்டினிலேயே உலகமக்களுடைய உள்ளத்தில் அதிகமாகக் குடிகொண்டிருக்கின்றன வெனலாம்; இந்த ஆண்டிற்றான் உலக இரண்டாம் யுத்தத்திலே வெற்றிபெற்ற சாதியினர் வலிமைகெட்டுத் தங்களுட் பரஸ்பரஞ் சந்தேகங்கொண்டு அகத்தில் மாறுபாடும் புறத்தில் ஐக்கியமுமுடையார்போற் காணப்படுகின்றனர்; இந்த ஆண்டிலேதான் சீனதேசம் இரண்டுபட்டுச் சமர்புரியத் தொடங்கியிருக்கின்றது. இத்தொற்றேஷிய நாட்டுப் பிணக்கு இன்னுந் தீர்ந்தபாடில்லை.

இனி, எங்கள் அயல்நாடாகிய இந்தியாவிலே இவ்வாண்டில் நேர்ந்தவற்றை நினைக்குமிடத்து, இந்த 48-ம் ஆண்டுத் தொடக்கத்திலேயே, இந்திய மக்களுக்கும் உலகத்திலுள்ள ஏனைய மக்களுக்கும் ஆபத்தான பேரிழவொன்று நேர்ந்ததெனலாம்; அதுதான் மகாத்மாகாந்தியவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகிய தீராத்துயரோடு கூடிய ஆபத்து இந்தக்கவலை இந்திய மக்கள் இலங்கைத் தமிழ்மக்களின் உள்ளத்தைவிட்டு இலகுவில் நீங்குவதன்று; இந்துமக்களுக்கு இப்பேரிழவினால் உண்டான கவலைபோல், இஸ்லாமிய மக்களுக்கும் இந்த ஆண்டின் நடுக்கூற்றினிலே பாகிஸ்தான் தலைவராகிய ஜின்னாவின் சடுதிமரணம் பெருங் கவலையை விளைக்கலாயிற்று; இந்தியாவிலுள்ள காஸ்மீரம் ஹைதராபாத் முதலிய இடங்களில் இஸ்லாமியர் ஆங்காங்குள்ள இந்துக்களைப் புறக்கணித்து அவர்களுக்கு இன்னல்செய்து கலகம் மூட்டியதும், அக்கலகங்களைச் சுதந்திர இந்திய அரசினர் ஆண்மையோடு அடக்கி நாட்டைச் சமாதான நிலையில் வைத்திருப்பதும், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் பண்டித நேரு முதலாம் பாரதநாட்டுத் தலைவர் நடாத்தும் இராச்சியம் பழைய ராமராச்சியத்திற் கொப்பாகுமென இந்திய மக்களும் அம்மக்களுக்குச் சார்பானமக்களும் பெருமிதமடைதலும், அயிரோப்பிய அரசினரும் அமெரிக்க அரசினரும் உலகத்திலுள்ள ஏனைய நாடுகளின் அரசினரும் சுதந்திர இந்திய பரிபாலனத் திறத்தை மெச்சிவருவதும் இந்த ஆண்டு தொடக்கமாகவே யெனலாம். விவசாயம் கைத்தொழில் வியாபாரம் கல்விவிருத்தி முதலியவற்றில் இந்தியமக்கள் இவ்வாண்டிலே அதிகமோங்கி வரலாயினர்.

இந்திய விவகாரங்கள் இங்ஙனமாக, இவ்வாண்டில் எங்கள் இலங்கையில் நடந்த நன்மை தீமைகளை ஆராய்ந்து தொகுத்துச் சொல்லுங்கால், இந்நாடு சொல் லளவிலேதான் சுயராச்சியம் பெற்ற தென்பதும், இதுபெற்ற ராச்சியம் பூரண சிங்கள அதிகாரமென்பதும் இந்த ஆண்டின் ஈற்றுக் கூற்றிலேதான் புலப்படலாயிற்று. திரு. சனநாயகவைத் தலைமையாகக்கொண்ட பாராளுமன்றப் பரிபாலன நிலைமை, ஆரம்பத்திலே விவசாயத்தை விருத்தி செய்தல் இடையிடையே தொழிற்சாலைகளை யமைத்தல் பாலங்களைத் தெருவீதிகளை வேண்டிய வேண்டிய இடங்களில் அமைத்தல் திறத்தல் முதலான நன்மையான செயல்களுடன் காணப்பட்டதாயினும், இந்த டிசெம்பர் மாசத்திலே பாராளுமன்றத்துக் கூட்டத்தில் நடந்த சில செயல்களும், உபயங்களும், இங்குள்ள தமிழ் மக்கள் பொருட்டுச் சிங்கள அரசினர் செய்த சில நன்மைகள் நயவஞ்சகமானவையென எண்ணக்கிடக்கின்றன. இந்த ஆண்டிலேயே இரண்டாய்ப் பிரிந்திருந்த தமிழர் மூன்று நான்காகப் பிரிந்தனரெனச் சொல்லலாம். தொகுத்துச் சொல்லுகில் இந்த ஆண்டினிற்றான் சிங்களரிடத்து ஒற்றுமையும் இங்குள்ள தமிழரிடத்து வேற்றுமையும் அதிகப்படலாயின வெனலாம். கொலை, அவமிருத்துக்கள், களவு, கொள்ளையடித்தல் முதலாம் அக்கிரமங்களும் இந்த ஆண்டில் அதிகப்படலாயின; மக்கள் வாழ்க்கைக்குரிய பொருளாதார விஷயத்தைப் பற்றிச் சிந்திக்குமிடத்தில், அரிசி நெல் முதலிய இன்றியமையாப் பொருள்கள் யுத்தகாலத்தைக் காட்டிலும் இவ்வாண்டில, இவ்வாண்டிலும் பிற் கூற்றில் அதிக விலையேறலாயின வெனலாம்.

இங்ஙனமாக, இந்த ஆண்டோடு எங்கள் யாழ்ப்பாண நாட்டின் நிலையை யொட்டிப் பார்க்குமிடத்து, யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கைநிலை சிலவினுஞ் சிலவற்றிலொழிய, பலவற்றிற் குன்றி வருகின்றதென்றே சொல்லலாம், யாழ்ப்பாணத்திலே சமயாபிமானம் தெய்வ பக்தி நம்பிக்கை சைவ வொழுக்கம் சைவ சமயக் கல்வியைப் பயிலவேண்டும் பயிற்றவேண்டு மென்ற ஆர்வம் பழைய சிறந்த ஆசார ஒழுக்கங்கள் கொள்கைகள் குன்றத் தலைப்பட்டுக்கொண்டன வெனல் மிகையாகாது. மதுபானமும் அதனால் வருங் கேடுகளும் அதிகப்படலாயின. பெரியார் சிறியார், நல்லார் பொல்லார், கற்றூர் கல்லார் என்ற பேதங்க ளொழியலாயின; இவ்வாறனவை இன்னுஞ் சிலவுள; எடுத்துக்கூறின் அநர்த்தம் விளையும். இங்குள்ள பல மக்கள் சமயக் கொள்கையை அரசியலின் பொருட்டுப் பலி கொடுப்பாராயினர். மேலே எடுத்துக் காட்டப்பட்டனவெல்லாம் முந்தியே முளைத்தனவாயினும் இந்த 48 ம் ஆண்டினிலேயே ஓங்கி வளர்கின்றன; இங்குள்ள பெரிய வித்தியாசாலைகளில், இலவசக் கல்வித்திட்டம் வந்தமையின் பயன்போலும், மாணவர்கள் படித்தற்கிடம் பெறுகின்றிலர்; பெற்றூலும் சமயக் கல்வி பயில்வதற்கு இடமில்லையாம். இவை யொருபுறமாக, இதுகாறும் பட்டின முறையிற் பரிபாலனம் பெற்று வந்த இந்த யாழ்ப்பாணப் பட்டினம், இனி நகரமாகி,நகரசபைப் பரிபாலனத்தைப் பெற்றிருக்கிறது; இந்த ஆண்டின் ஈற்றிலேதான் இவ்வியாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த நன்மையொன்று என்னவெனின், சைவம் தமிழ் என்னு மிரண்டன் பொருட்டும் 43 வருட காலமாகப் பல்லாற்றூலும் பெரிதும் உழைத்து வந்த சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தினர், யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலன சபையாரின் அழைப்பிற் கிணங்கி, நாற்றுக் கணக்கில் இங்கு வந்து யாழ்ப்பாணஞ் சைவ மக்களின் ஆதரவுடன் தங்கள் 43-ம் ஆண்டு மகாநாட்டை மூன்று தினம் இங்கு நடாத்தி வருதலேயாம்.

### நகரசபை மண்டபத்தில் பகிரங்கக் கூட்டம்

வருகிற வியாழக்கிழமை (30—12—48) மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் யாழ் நகரசபை மண்டபத்தில் ஒரு பகிரங்கக் கூட்டம் நடைபெறும். அத்தருணம் சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் தலைவர் ஸ்ரீ எம். பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L அவர்களும், காரியதரிசி ஸ்ரீ கே. ரங்கசாமி முதலியார் அவர்களும், ஸ்ரீமதி சிவகாமி அம்மாள் அவர்களும் சொற்பொழி வாற்றுவார்கள்.

### பூனைகளுக்கு ஹோட்டல்!

கென்ற் என்னுமிடத்திலுள்ள பெக்கென்ஹாம் என்னும் பகுதியைச் சேர்ந்த மிஸ் ஆர். லவ்டே என்னும் பெண் தன் வீட்டிலே ஒரு தனிப் பகுதியைப் பூனைகளுக்கு ஒரு ஹோட்டலாக நிர்மாணித்துள்ளாள். அந்த ஹோட்டலில் நாகரீகமான மெத்தை கதிரைகளும், சாய்மனைக் கதிரைகளும் இருக்கின்றன, அங்கே அயலிலுள்ள எல்லாப் பூனைகளும் வருகின்றனவாம். அப்பெண், "பணக்காரரிடம் மட்டுமே நான் பணம் பெறுகிறேன்!" என்று சொல்லுகிறாள்.

### திரு வடகுரங்காடுதுறைத் தலச்சிறப்பு

திருச்சிற்றம்பலம்,

கோலமா மலரோடு தூபமுஞ்
சாந்தமுங் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினர்
திருந்துமாங் கனிகளுந்தி
ஆலுமா காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
நீலமா மணிமிடற் றடிகளை
நினையவல் வினைகள்வீடே,

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருப்பதிகம் பெற்று விளங்கும் திரு வடகுரங்காடுதுறை என்னும் இத்தலம தஞ்சை ஜில்லாவில் ஐயம்பேட்டைப் புகைரத ஸ்தானத்துக்கு வடக்கே 3 மைல் தூரத்திலுள்ளது. 49-வது தலமாக எண்ணப்படுஞ் சிறப்பினது. வாலி (குரங்கு) வழிபட்ட காரணத்தால் குரங்காடுதுறை எனப்பெற்றது. சுக்கிரீவன் பூசித்துப் பேறுபெற்ற தலம் ஒன்று. ஆடுதுறை புகைரத ஸ்தானத்துக்குவடகிழக்கே ½மைல் தூரத்தில் விளங்குகின்றதாதலின் அது தெனகுரங்காடுதுறை என்றும், இது வடகுரங்காடுதுறை என்றும் வழங்கப்பெறுவன. இத்தலப்பதிகத்திலும "கோலமா மலரொடு தூபமும் சாந்தமுங்கொண்டு போற்றி வாலியார் வழிபட" (6-ம் பாடல்), "நீலமாமணி நிறத்தரக்கனை இருபது கரத்தொடு ஒல்கவாலினால் கட்டிய வாலியார் வழிபட" (8-ம் பாடல்) எனவரும் பகுதிகளும் கருதத்தக்கன. கருப்பத்தினாலும் வழி வருத்தத்தினாலும நீர் வேட்கையினாலும வருந்திவந்த ஓர்பெண்ணுக்காக இரங்கிய பெருமான் தென்னங்குலையை வளைத்துக் கொடுத்தருளிய காரணத்தால் இறைவன் குலைவணங்கு நாதர் எனப் பெயர்பெற்றூர். இறைவி அழகு சடைமுடியம்மை.

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின்மாதஜன்ம நட்சத்திர திருநாட்களில் திருப்பதிகமபெற்ற சிவ தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டுவழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 24-12-48 அன்று திருவட குரங்காடுதுறை ஸ்ரீ குலைவணங்குநாதர் ஆலயத்தில அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய இவ்வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெறுகிறது.

### இறந்தவர் பிழைத்தார்

இத்தாலி நாட்டில் 48 வயது சென்ற பிளோரட்டியா என்பவர் சில நாட்களுக்குமுன் இறந்து விட்டாரென்று பிரேத அடக்கத்துக்கு ஏற்பாடுகள் ஆய்விட்டன. ஆனூல் அவர் இறந்து 48 மணிநேரம் ஆனபின்னர், அவர் எழுந்து உட்கார்ந்து தன்னை அடக்கஞ் செய்வதற்குப் பிரேதப் பெட்டியும் துக்கங் கொண்டாட நண்பர்களும் வந்திருப்பதுகண்டு வியப்படைந்தார். பின்னர் அவர் மற்ற நண்பர்களுடன் அவர் மரணத்திற்காக ஏற்பாடாயிருந்த விருந்தையும சாப்பிட்டார். ஓர் பூஞ்சோலையின் வழியாகத் தேவலோகத்திற்குச் சென்றதாகவும் அங்கிருந்த யாரோ ஒருவரைத் தூக்கி விட்டதாகவும் அவர் கனவு கண்டாராம்.

### காரைநகர்ச் சைவமகா சபை

நிகழும் சர்வதாரி ஞு மார்கழி மீ 16உ (30.12-48) வியாழக்கிழமை காலை எட்டுமணியளவில் இச் சபையின் வருடாந்தக் கொண்டாட்டம சைவ மகாசபை மண்டபத்தில் நடைபெறும், அவ்வமையம் சாதுார் வழக்கறிஞர் T. S. கந்தசாமி முதலியார் B. A. அவர்கள் 'திருவள்ளுவர்' என்னும் விஷயம்பற்றியும், தூத்துக்குடி பாகப்பிரியாள் சங்கத்தலைவர் ஸ்ரீமதி ச. சிவகாமி அம்மாள் அவர்கள் 'வாழ்க்கையின் இலட்சியம்' என்னும் விஷயம்பற்றியும் திருச்சி தமிழ் ஆசிரியர் பண்டிதர் பஞ்சரத்தினம்பிள்ளை அவர்கள 'அருட்கனி' எனனும்விஷயம் பற்றியும பிரசங்கஞ் செய்வார்கள். —கடித

### காலநிலை

நேற்று காலை தொடக்கம் மழை இங்கே அடைத்துப் பெய்து இப்பொழுதும் பெய்கின்றது. இம மழை நெற் பயிருக்கு அநுகூலமாகவும் இப்பொழுது நடக்கும் மகா நாட்டுக்குப் பிரதிகூலமாகவும் பெய்யலாயிற்று.


### கந்தசாமி வைத்தியர்

#### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட ஆதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுகி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத் தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீக்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மல சலக்கட்டுநீக்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் நீக்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால்களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூப 5-00**

வி. பீ. பி. யில் அனுப்புவோம். வெளிநாட்டிற்கு வி. பி. பி. இல்லை

விலாசம் :

ஆயுள்வேத
சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை — செ

Std 23-7—23.7.49.

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு


## :: வானவில் ::

● கலாமந்த்ரன் ●

○ ஆத்திரம் அளவுக்குமீறி, ஞாபகசக்தியை அடியோடு இழந்து நிதிமந்திரி ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் கண்டியில் நடைபெற்ற 'பெண்கன் கூட்டம்' ஒன்றில் பேசினூர் என்பதைஎண்ண எந்த ஆணுக்குமே அழுகையும் சிரிப்பும் கலந்து வரும். கொடி விஷயமாகப் பேசும்போது அவர், "உங்கள்பகுதிப் பிரதிநிதியாகிய - அரிவாளும் சம்மட்டியும் வேண்டு மென்கிறூர். இலங்கரத்தின அவர்களே கொடி சம்பந்தமாய் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றபோது, 'எங்கள் சிங்கக்கொடி'யை எதிர்த்து வாக்களித்தார்" என்று கூறினூராம். பாவம், கொடி சம்பந்தமாக அவர்கள்'சபை'யில் விவாதம் நடைபற்ற காலத்தில் திரு. இலங்கரத்தின அவர்கள் கண்டிப் பகுதியின் பிரதிநிதியா யிருக்கவில்லை என்று அவருக்குச் சொல்லவருமே அகப்படவில்லைப் போலிருக்கிறது.

○ மாலைக்குமேல் மாலை, புகழுக்குமேல் புகழ், பதவிக்குமேல் பதவி எல்லாம தண்ணீர் பட்ட பாடாய் விட்டது, ஒரு தனிப்பட்டவருக்கே இவைகள் எல்லாம் கிடைத்தபோதும் மற்றவர்கள் அதையிட்டு வருந்தவோ, பொறுமைப் படவோ கூடாது. அத் தனிப்பட்ட பெரியார் ஒரு தனிப்பட்ட சமூகத்தினரின் தனித் தலைவராக இருக்கும் போது, வேறு சமூகத்தினரே அவரது செயல்கள் யாவும் உத்தமமானதை என்று புழுக்கு புகழ் மாலைகள் சூட்டும்போது மற்றவர்களும் அவரைப் போற்றிப்புகழ்ந்து வழுத்தவேண்டும்!

○ இந்திய ஐக்கிய மாகாண அரசினர் லஞ்சக் குற்றங்களைக் குறைப்பதற்காக ஒரு புது முறையைக் கையாண்டு, இரகசியப் பொலிஸ்படை ஒன்றைத் தயாரிக்கிறூர்களாம. பொதுமக்களைக் 'கண்காணிக்கும்' பொலிசார் அவர்களிடம் லஞ்சம் பெறுகிறூர்களோ என்று, அப் பொலிசாரைக் கண்காணிப்பதே இந்த இரகசியப் பொலிசாரின் வேலையாம். இந்த இரகசியப் பொலிசார் சாதாரண பொலிசாரிடம் இரகசியமாகக் கையை நீட்டுகிறூர்களோ என்று உளவறிய இன்னும் ஒரு 'இரகசியப் பொலிஸ் படை'யையும் நிர்மாணித்தால் மிக்க உதவியாக இருக்கலாமென்று இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அபிப்பிராயப்பட்டாராம்!

○ ஒரு பிச்சைக்காரக் கிழவன், நடக்கத் திராணியற்று, மயங்கித் தெருவிலே விழுந்து விட்டான். மூக்கிலே அடிபட்டு, மூக்கினூடாக இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. முகக்குப்புற விழுந்த அந்த வயோதிபனை நிமிர்த்தவே முடியாமற் போயிற்று. பக்கத்திலே அவனது சிறுபையும், சிதறிப்போன அரிசியும், ஒரு குவளையும் கிடந்தன. கிழவன இறந்துவிட்டானே என்றுகூடச் சந்தேகிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. சைக்கிளிலே வந்த ஒரு வைத்தியர், பிரபலமானவர், நின்று இறங்கினூர். கிழவனைச் சூழ நின்றவர்கள், "நல்லதாய்ப் போயிற்று" என்று ஆவலோடு சொல்லிக் கொண்டார்கள். அவர் குனிந்து பார்த்துவிட்டு, "யார், பிளாக்மார்க்கெட் வியாபாரியா? அரிசி என்ன விலையோ?" என்று ஹாஸ்யரசம் ததும்பக் கேட்டுவிட்டுப் போய்விட்டார்! பிரதம சிகிச்சை தெரிந்த அவரை, "வைத்தியரே" என்று அழைக்கத்தான் தோன்றுகிறது.

○ 'அரசாங்கச் சவுக்கு'ஆன திரு. குணசிங்கா அவர்கள், திரு. வி. வன்னியசிங்கம் அவர்களுக்கு எழுதிய கடிதம ஒன்றில், "நீங்கள் எனக்குக் கடிதம் எழுதும்போதே அதன் பிரதியைப் பத்திரிகைக்குக் கொடுக்க ஓடுகிறீர்களே" என்று குறிப்பிட்டார். அதற்குப் பதிலாக திரு. வன்னியசிங்கம் அவர்கள், "உங்கள் முதல் கடிதம் எனக்குக் கிடைப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னமே அதன் சாராம்சம் பத்திரிகையில் வெளிவந்துவிட்டதே: ஆனூல் நான் எழுதிய கடிதம் இரண்டுநாட் கழிந்தே பத்திரிகையில் வெளிவந்தது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்" என்று சவுக்கடி கொடுத்தாராம்: கண்டதெல்லாவற்றுக்கும் அடித்துச் 'சுரணை' கெட்டுக்கொண்டிருக்கிற அந்தச் சவுக்குக்கு இந்தச் சவுக்கடி எருமை மாட்டுக்கு ஈ கடித்ததுபோல இருக்கும்!

○ சென்னை 'மெயில்' பத்திரிகை இப்பொழுது பத்திரிகை உலகுக்கே அதனமான ஒருதொழிலைத் தொடங்கியிருக்கிறது. பிரமச்சரியத்தின் எடுத்துக்காட்டாக இலங்கும் சென்னைக் கல்வி மந்திரி ஸ்ரீ அவினூசிலிங்கம் செட்டியார் அவர்கள் விவாகம் செய்துகொண்டால், புதுமையான பெண்மை அவரது வைரித்த வைதிகக் கொள்கைகளை மாற்றிச் சிறந்த கொள்கைகளை ஏற்படுத்தும் என்றும் அதனூல் நாட்டுக்கு நன்மையுண்டு என்றும் கூறி செட்டியார் அவர்களுக்கு விவாகம் பேச ஆரம்பித்துவிட்டது அந்தப் பத்திரிகை, அதன் முயற்சி சித்தியடைந்தால்கூட அதற்குத் 'தரகு' கிடைப்பது முயற்கொம்புதானென்பதை இப்பொழுது உணர்ந்து கொள்ளட்டும்!

○ "எழுதுவதற்கு மிக மேலான 'விஷயம்' உன் கையில் இருக்கும்போது, எழுத்தாளனுகிறதற்கு 'யோகம்' வேண்டியிருக்கும். ஆனூல் அந்த 'யோகம்' உன்கையில் வரும் போது 'விஷயம்' இன்றி யிருப்பாய். இதுதான் எழுத்தாளனே, உன் வாழ்வுமுறை" என்று ஓர் பிரபலமான எழுத்தாளர் கூறுகிறூர்.

# கந்தபுராணக்கவி நுட்பம்

## விடைபெறு படலம்

[வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள்வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும்பெருங் குறிப்புக்கள்இப்[ ]பகரக்குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.]

ஏது மெல்லிலை லமுத மென்கொடி யென்பாள்
பாக சாதனன் முன்னமோர் குழவியாய்ப் படர்ந்து
மாக மன்னநின் னுடன்வரும் உபேந்திரன் மகள்யான்
ஆகை யாலெனைப் போற்றுதி தந்தையென் றடைந்தாள்.

இங்ஙனம் செல்லும்போது அமிர்தவல்லி யெனப்படும் கன்னிகை இந்திரனுடைய முன்னிலையில் ஒரு பெண்குழந்தை வடிவுகொண்டு கடந்து, விண்ணுலக அரசே! உன் தம்பியாகிய உபேந்திரனுடைய மகளாயுள்ளேன்; அத்தொடர்பினாற் பெரிய தந்தையே, என்னை மகளென வளர்க்குதி என்று அவனிடமிருந்தாள் என்பது கருத்து.

பாகசாதனன் - இந்திரன்; கன்னியாயிருந்து தவஞ்செய்து வரம் பெற்ற அமிர்தவல்லி, முருகவேளிட்ட ஆஞ்ஞைப்படி இந்திரனிடமிருந்து மகண்மைபூண்டு வளரவேண்டிப் பெண்குழந்தை வடிவங்கொண்டு அவ்விந்திரனை யடைந்தாளென்பார், "குழவியாய்ப் படர்ந்து" என்றார். மாகம் - விண்ணுலகம்; உபேந்திரன் இந்திரனுக்குத் தம்பியாய்த் திருமால் தோன்றிய அவதார புருஷன்; தந்தை அண்மைவிளி. (7)

பொன்னின் மேருவி லிருந்தவன் புல்லிலை நோக்கி
யென்னை யீன்றயாய் ஈங்ஙனம் வருகென விளித்துத்
தன்ன தாகிய தனிப்பெருங் களிற்றினைத் தனது
முன்ன ராகவே விளித்தனன் இத்திற மொழிவான்.

பொன்மயமான மேருமலையிலிருந்த இந்திரனானவன் மகளாகிய அமிர்தவல்லியைப் பார்த்து என்னைப் பெற்ற அன்னையொப்பவளே இங்குவருக என்று சொல்லித் தனக்குரியதாகிய ஒப்பற்ற பெரிய ஐராவதமென்னும் யானையைத் தன் முன்னிலையில் வரச்செய்து, பின் வருமாறு சொல்லுகின்றான் என்பது கருத்து.

தனது சுவர்க்கலோக ராச்சியத்தைச் சூரபன்மன் கவர்ந்துவிட, அவனுக்கஞ்சி மேருமலையில் ஒதுக்கிடந் தேடிவந்து அம்மேருவின் ஒருசாரலில் மனோவதியென்னும் நகரில் வசித்தவனாதலின் இந்திரனை, "பொன்னின் மேருவிலிருந்தவன்" என்றார். அமிர்தவல்லியைக் கண்டமாத்திரத்தே இந்திரன் "என்னை யீன்றயாய் இங்ஙனம் வருக" என இசைத்தது, தன்னிடம் மகளென்ற முறை பாராட்டிவரும் அமிர்தவல்லியாகிய குழந்தை தங்களையெல்லாம் வாழ்விக்க வந்தருளிய முருகவேளுக்குச் சத்தியாகும் பேற்றினையுடையாளென்பதை யுணர்ந்துள்ளமையினாலென்க. இதனை "ஆனைவன்பொருட்டால் அந்தமில் சிறப்பெய்தமேல்" என அடுத்த திருவிருத்தத்திற் கூறப்படுதலானும், பின்னர்த் தெய்வயானையம்மை திருமணப் படலத்தில் "கந்தவேள் யளித்தருளு கன்னை வருக"என இவ்வம்மையாரை இந்திரன் விளிப்பதனானுமுணர்க. (ஐராவதம்) தெய்வத்தன்மையோடு கூடியதாதலால் "தனிப்பெருங் களிறு" எனப்பட்டது.

[மேருவிலிருந்தவ - மேருகிரியில்ன் மனோவதியிலிருந்த இந்திரன்; இம் மனோவதி வேறு, சத்தியவுலகிலுள்ள மனோவதி வேறும்.] (8)

இந்த மங்கைநந் திருமக ளாகுமீங் கிவளைப்
புந்தி யன்பொடு போற்றுதி யினையவள் பொருட்டால்
அந்த மில்சிறப் பெய்துமேல் என்றலு மவனைக்
கந்த மேற்கொடு நன்றெனப் போயது களிறு.

இந்தப் பெண் எங்கள் செல்வ மகளாவள்; இப்பொழுது இப்பெண்ணை மனப்பூர்வமான பத்தியொடு பேணி வளர்க்குதி, இச்செல்வி மூலம் எல்லையற்ற சிறப்புக்களெல்லாம் இனிமேல் வந்துசேரும் எனச் சொல்லுதலும், அப்படியே செய்கின்றேனென உடம்பட்டு அந்தப் பெண் குழந்தையைத் தன் பிடர்மேல் வைத்துக்கொண்டு தன்னிடத்திற் சென்றது அந்த ஐராவதமெனப்படும் யானை என்பது கருத்து.

திருமகளென்பதற்குச் சகல செல்வத்தோடுங்கூடிய மகள், தன்னையடைந்தோர்க்குச் சகல செல்வங்களையும் அருளும்மகள் எனப்பொருள் கொள்க. அந்தமில் சிறப்பு மேலெய்துமென்பதனை இந்திரன் அப்பொழுதே முருகவேளருளால் அறிந்துளனாதலினாற்போலும் மகளாகுமென வாளா கூறாது திருமகளாகுமென்றான். இது மேலுள்ள திருவிருத்தத்தில் "என்னையீன்றயா யிங்ஙனம் வருக" என இந்திரன் விளித்தமைக்குக் கொண்ட பொருளை வற்புறுத்தியவாறும். கந்தம் - மத்தகம். நன்றெனல் – தனக்கு ஒருவர் இட்ட பணியை, இல்லையேல், தன்னிடம் ஒருவர் கேட்ட வேண்டுகோளைச் செய்தற்குத் தான் உடம்பட்டமையை யுணர்த்தும் பொருளில் வருவதாகும்; இது உலக வழக்கிலும் "நல்லது அப்படிச் செய்கிறேன்" என்பனபோல், வழங்குதலை அவதானிக்கலாகும். (9)

கோவ்வை போலிதழ்க் கன்னியை மனோவதி கொடுபோய்
அவ்வி யானையே போற்றிய தனையகா ரணத்தாற்
தெய்வ யானையென் றொருபெய ரெய்தியே சிறிதும்
நோவ்வு றுதலீற் றிருந்தனள் குமரனை நுவன்றே.

கொவ்வைக்கனிபோன்ற அதரத்தினையுடைய அப்பெண்ணை மனோவதி யென்னும் நகரத்திற் கொண்டுசென்று அந்த ஐராவதமென்னும் யானை தானே வளர்த்தது. அங்ஙனம் வளர்த்த ஏதுவினால் அப்பெண்ணுக்குத் தெய்வயானை என்னும் ஒருபெயர் வழங்க சிறிதேனும் சிரமமடைதலின்றிக் குமரவேள் திருநாமங்களை உச்சரித்துக்கொண்டிருந்தாள் என்பது கருத்து,

யானையே யென்பதில் ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது; தெய்வத்தன்மை பொருந்திய யானையினால் வளர்க்கப்பட்ட காரணத்தினால் தெய்வயானை என்னும் பெயராயிற்றென்றபடி.

[இவ்வியானை விலங்குச் சாதியைச் சேர்ந்த ஏனைய யானைபோலாது தேவர்கட்குள்ள அறிவு குணம் முதலியவற்றைப் பொருந்திய விசிட்டமுடையதாகலின் அவ்வமுதவல்லியாரைச் சிறிதும் சிரமமின்றிக் காத்தது. கவறல் ஈண்டுத் திபானித்தல், இந்திரன், சூரபன்மன் முதலாம் அசுரருக்கஞ்சி யொளித்து, நிலையின்றி அலைந்து திரிந்தானாதலின், தனது வாகனமாகிய ஐராவதயானையிடத்தில் அமிர்தவல்லியைப் பேணி வளர்க்கும்படி கொடுத்தானென்க.] (10)

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

* இசைத்தட்டு

புதன் டிச 29

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 பி ஆர் சிவசங்கரம்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 ரேடியோ வாத்யகோஷ்டி 8 30 ஜெ ராமய்யா வயலின் 9 முடிவு.

1 கதம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஜெ ராமய்யா வயலின் 2 தமிழில் செய்திகள் 2 05 ஜெ ராமய்யா வயலின் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 பி ஆர் சிவசங்கரம்பிள்ளை பாட்டு 5 10 இசைப் பயிற்சி 5 30 இசைவிழா ஒலிப்பதிவு 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 காலத்தின் படைப்பு நாடகம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 மனிதசக்தி 3 தறகாப்பு 8 இசைவிழா 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 அறிவிப்புகள், வானிலை ஆங்கிலம் 9 20 குரல்வளை * 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 இசைவிழா ஒலிப்பதிவு 10 30 முடிவு.

வியாழன டிச 30

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 சரோஜினி ஜகநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8 15 குரல்வளை * 8 30 பி வி நாராயணன் லக்ஷ்மணன் வீணை 9 முடிவு.

1 கதம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 மகளிரை மாதர்களுக்கான இசைநிகழ்ச்சி 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 எஸ் எஸ் டாமசிவப்பிள்ளை பாட்டு 5 10 இசைப்பயிற்சி 5 30 இசைவிழா ஒலிபபதிவு 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரானம் * 7 30 தமிழில் செய்திகள் 7 45 கல்விமுறை 3 தொழில்கல்வி 8 இசைவிழா ஒலிப்பதிவு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 20 குரல்வளை * 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 இசைவிழாஒலிப்பதிவு 10 30 முடிவு.

வெள்ளி டிச 31

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 மதுரை பி எம் வெங்கடகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 எம் ஆர் சீதாரமணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம் ஆர் சீதாரமணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எம் ஆர் சீதாரமணி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 மதுரை பி எம் வெங்கடகிருஷ்ணன் பாட்டு 5 10 குரான்-ஷரீப் 5 30 இசைவிழா ஒலிப்பதிவு 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி வேணுகோபால் கிளாரினெட் 7 15 சித்ரானம் * 7 30 தமிழில்செய்திகள் 7 45 சமது தபால்பெட்டி 8 இசைவிழா ஒலிப்பதிவு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 மனமாருட்டம் சிறுகதை 9 30 லண்டனிலிருந்துசெய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 இசைவிழா ஒலிப்பதிவு 10 30 முடிவு.

## சைவ வித்தியாசாலைகளில் சமயக்கல்வி

அன்புடையீர்,

மேற் காட்டினுள்ள சைவப்பள்ளிக்கூடங்களிற் சைவ சமயக் கல்வியைச் செவ்வனே ஊட்டுவதையும் சைவ மாணவர்கள் சைவ சமய சாதனைகளை அனுட்டிப்பதற்கு ஊக்கப்படுத்தும்வழி வகைகளை யோசிக்கவும் சைவவித்தியாசாலை அதிபர்களதும் பிரதமாசிரியர்களதும் ஏனைய சைவாபிமானிகளதும் பொதுக் கூட்டமொன்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் கிசும் சர்வதாரி ஹூ மார்கழி மீ 16 ம் திகதி (30-12-48) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் நடைபெறும்.

தலைவர் : சைவப்பெரியார்

திரு.சு. சிவபாதசுந்தரம் அவர்கள் B.A

பேச்சாளர்கள்:

திரு சி. உ சோமசேகரம்அவர்கள் M.A
"அகமாலும் சமயமும்"

திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் B A., B. SC.,
"வித்தியாசாலைகளில் சமயக்கல்வி"

இப்பொருள்கள் சம்பந்தமாகச் சபையார் குறிப்புரை கூறியபின் கூட்ட நோக்கங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்மானங்கள் செய்யப்படும்.

தயவுசெய்து சமுகமளிப்பீர்களாக.

24-12-48 மு. மயில்வாகனம்
யாழ்ப்பாணம் காரியதரிசி.

M. 188 28—12—48.

## பகவான் அரவிந்தர்

பகவான் அரவிந்தருக்கு ஆந்திர பல்கலைக் கழகத்தார் அளித்த பதக்கத்தையும் பரிசையும் பல்கலைக் கழகத் தலைவரான கா. ராமலிங்க செட்டியார் புதுச்சேரிக்குச் சென்று அரவிந்தரிடம் நேரில் சமர்ப்பித்தார். செட்டியார் அரவிந்தருடன் அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். அரவிந்தர் ஆந்திரப்பல்கலைக் கழகத்திற்கும் ஆந்திர நாட்டாருக்கும் தமது வாழ்த்தைத் தெரிவித்தார்.


### தேவை

திறமைவாய்ந்த தமிழ்,இங்கிலீஸ் கொம்பொசிட்டர்களும், மெஷின் வேலை செய்யக்கூடிய தேர்ச்சியுள்ளவர்களும்,பைண்டர்களும் தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். நற்சாட்சிப் பத்திரங்களுடன் மனுச்செய்க.

மனேஜர், விவேகானந்தபிறெஸ், யாழ்ப்பாணம் (போன் - 117.)

M. 188 28—12—48, 1—1—49

### சலரோகம்

அப்ரக் செந்தூரம் — கைகண்ட மருந்து

புதுக்கோட்டைத் தலைமை வைத்திய அதிகாரியும், சுகாதார உத்தியோகத்தருமாகிய ரூவ்சாகிப் Dr M. G. இராமச்சந்திராவ் தெரிவிப்பதாவது:

"இம்மருந்தை ஒரு சாய்புவுக்குக் கொடுத்தபோது 15 நாட்களில் நீரிற் சர்க்கரைச் சத்து அறவே நீங்கிவிட்டது."

20 வேளை 10 நாள் மருந்து ரூபா 10

தோய்வு தும்மல் காசநோய்க்கு சொர்ணகல்பம் ½ தோலா ரூபா 8—50

Dr. K. S. பரிபூரணநந்தா
Regd. Medical Practitioner, (Madras)
349, நாவலர் ரோட்டு :: :: யாழ்ப்பாணம்

Std 4 12-11—12-6—49

### இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 00. 000 |

தலைமைக்காரியாலயம்:- பிறின்ஸ்ரஸ்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸ்ற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ் வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்),வழுவெட்டித்துறை.
யாழ்ப்பாணத்துக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிறோட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை வதிலை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் சொம்ஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி முற்றுக்கு வருடம்ஒன்றுக்கு 1½ விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்: அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டுவிவகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி,கொழும்பு.


இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு

Std. 54 1-8-48—30-7-49

### ஸ்ரீ ரங்கா மியூசிக்கல் வேர்க்ஸ்

அறிவித்தல்



வயலின், வீணை, ஆர்மோனியம், சுதிப்பெட்டிகளும், இன்னும் பலவிதமான வாத்தியக் கருவிகளும், குறைந்தது மூன்று வருஷ உத்தரவாதத்துடன் புதிதாகச் செய்தும், பழுது பார்த்தும் கொடுக்கக்கூடியதிறமைவாய்ந்த இந்தியத்தொழிலாளர்கள் இருக்கின்றனர்

ஒருமுறை பரீட்சித்தால் உண்மை விளங்கும்!

(ஹாஜியார் பில்டிங்)
No. 76/1
கன்னாதிட்டி :: யாழ்ப்பாணம்
(ஆரிய பார்மேஸிக்கருகாமையில்)

இங்ஙனம்
K. C. வேலாயுதம்

M. 187 28-12—18-1-49 (செ)

### திரு வே. சிவக்கொழுந்து அவர்களின் பிரசுரங்கள்.

ஆரம்பவகுப்பு நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | நாலாந்தரக் கணிதம் (புதியபதிப்பு) | ... விலை ரூ. 1-35 |
| 2 | ஐந்தாந்தரக் கணிதம் (புதியபதிப்பு) | ... விலை ரூ. 1-75 |
| 3 | நாலாந்தரப் பூமிசாஸ்திரம் (7-ம் பதிப்பு) | ... விலை சதம். 80 |
| 4 | ஐந்தாந்தரப் பூமிசாஸ்திரம்(5-ம பதிப்பு) | ... விலை ரூ. 1-00 |
| 5 | இரண்டாம் மூன்றாந்தரப் பூமிசாத்திரங்கள் | (அச்சில்) |
| 6 | இரண்டாம் மூன்றாந்தரக் கணிதங்கள் | ... (அச்சில்) |
| 7 | இரண்டாம், மூன்றும், நாலாம் ஐந்தாந்தர மனக்கணிதங்கள் | ... (அச்சில்) |

உயர்தரவகுப்பு நூல்கள்

| | | |
|---|---|---|
| 8 | ஆறாந்தரக் கணிதம் (புதிய பதிப்பு) | ... விலை ரூ. 1-75 |
| 9 | ஏழாந்தரக் கணிதம் (புதிய பதிப்பு) | ... விலை ரூ. 1-75 |
| 10 | தமிழ்ப் பாடிகணிதம் ( 2-ம் பதிப்பு ) | ... விலை ரூ. 3-00 |
| 11 | தமிழ் அக்ஷரகணிதம் (பழையபதிப்பு) | ... விலை ரூ. 1-25 |
| 12. | தமிழ் கேத்திரகணிதம்(பழையபதிப்பு) | ... விலை ரூ. 1-25 |

புதிய பாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பெற்ற மேற்படி நூல்கள் ஆங்கிலகலாசாலைகளில் கல்விபயிலும் தமிழ் மாணவரும் அத்தியாவசியமான கல்வியறிவைப்பெற உகந்தபாடப் புத்தகங்களாகும்.

*Publishers:*
THE NORTH CEYLON BOOK-DEPOT,
Main Street: Point Pedro.

(Std. 57. 15-9-48 to 30-12-48.)

# யாழ்ப்பாணத்திற் சைவசித்தாந்த சமாஜம் 43-வது ஆண்டு விழா

1-ம் பக்கத் தொடர்ச்சி

மிண்டுகின்ற சுபாவம்' மணி வாசகர்க்கு மாத்திரமன்றி எமக்கே வந்துவிடும்போ லிருக்கின்றதல்லவா? 'உணர்வின் நேர்பெறவரும் சிவபோகம் ஒழிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் எளிவரும்' என்பது சேக்கிழார் கூறியருளிய பொய்யா மொழியல்லவா?

உயிராகிய தன்னிடத்தில் ஒடுக்கத்திலே சிந்திக்கின்ற பரமேசுவரன் உயிரையும் உலகையும் தன் கருணை என்னும் கருவிகொண்டே இயைபித்து வருகின்றான். இந்த உண்மையை உலகுக்கு உணர்த்த எழுந்த மெய்கண்டார் பரம்பரை நான் எனும் உணர்வு ஒழியவேண்டுமாயின் அது கருணைஎனும் பேருணர்விலேயே கரைந்து கரைந்து ஒயவேண்டும்' என வற்புறுத்திக் கூறும். வேறு எவ் வகையில் நானெனும் உணர்வு ஒழியவே ஒழிய மாட்டாது எனப் பரபக்கத்தார்க்கு உண்மையை உணர்த்தும். இந்தக் கருணையுணர்வை நம்மிடத்திலே உணர்த்த எழுந்த சைவ சாதனங்கள் இரண்டுள. ஒன்று உருத்திராக்கம்; மற்றையது திருவைந் தெழுத்து. சைவசாதனங்கள் என்னும் பொழுது எத்தனையோ பழைய நினைவுகளும் புதிய நினைவுகளும் என்னுள்ளத்தில் எழுகின்றன. பாண்டி நாடு முழுவதும் பூதிசாதனமின்றிக் கிடக்கிறது. மக்களெல்லாம் சமணசமய நாகரிகத்தில் (fashion) அகப்பட்டுக் கடவுள் இல்லை என்று சந்திக்குச் சந்தி நின்று பேசுவதிற் பெருமை காண்கிறார்கள். இரண்டு உயிர்கள் மாத்திரம் கண்ணீர் விட்டுத்தவங் கிடக்கின்றன. சைவம் வளர்க்கும் ஆன்மா ஒன்று தோன்றிப் பால்மணம்மாற முன்னரேயே 'தம்மிசைவே கொண்டியலும் தப்புரவில்லார் கொள்கை துகளாகச் சூழ்ந்தெழுந்து' இருநீற்றை நிலைநாட்டுகிறது. அந்தக் காலத்தில் நடந்த சம்பவம் இது.

இக்காலத்தில் எம்முடைய இந்நாடு முழுவதும் பூதி சாதனமின்றியே கிடக்கிறது. இங்குள்ள வாலிபர்களோ ஒருவித புது மனப்பான்மை பெற்று முன்னோரளித்த செல்வங்கள் என்னும் நினைப்பின்றி பிற் சந்ததியார் என்னும் நினைப்புமின்றி ஒன்றையும் பேணாமல் ஒன்றையும ஆக்காமற் பெயருக்கு வாழ்ந்து வருகின்றார்கள். இளைஞர்களுள்ளே முன்னோரளித்த சாதனச் செல்வங்களைப் பேணவேண்டும் என உணர்ந்திருக்கும் ஒருவர் இருவரைத்தானும் காண்பது அரிதாயிருக்கிறது. எமது நாடு முழுவதுமுள்ள இளைஞர்கள் சைவம் என்றால் ஒரு சமரசம் என்று முடிபுகட்டி வைத்திருக்கிறார்கள். இந்த முடிபு கிறிஸ்தவ இளைஞர்களிடத்திலில்லை. புத்த இளைஞர்களிடத்திலில்லை; எம் நாட்டுச் சைவ இளைஞர்களிடத்தில் மாத்திரம் இது குடிகொண்டிருக்கிறது. இது அவர்கள் நாத்திகப் படுகுழியில் விழுவதற்கு அவர்களைத் தயார்செய்து கொண்டிருக்கிறது. எம் இளைஞர்கள் இந்தச் சமரசம் பேசுவதனால் ஒன்றிலும் திடமான நம்பிக்கை யில்லாதவர்களா யிருக்கிறார்கள். எந்த உருவ நாமங்களாலேனும் கடவுளை வணங்குவதற்கு அவர்கள் வாய் எழுவதில்லை; மனம் பொருந்துவதில்லை. ஒரு பிள்ளையார் படத்திற்கோ, ஒரு முருகன் படத்திற்கோ ஒரு பூவிட்டுத் திருநீறு பூசுவதென்றால் தம் சமரசம் போய்விடுகின்றதே என அஞ்சுகின்றனர். 'அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை' என்ற அப்பர் வாக்கையும் உணர்கின்றாரில்லை. 'மனிதனெனப் பிறந்தவன் ஒரு நெறியில் - ஒரு உறுதியிற் சிரத்தையோடு வாழவேண்டும். உருவ நாமங்களைப்பற்றிச் சுழலும மனத்தையுடைய மனிதனுக்கு வேறு கதியேகிடையாது' என்று கூறும் பெரியோர் முடிபையும் கொள்கின்றாரில்லை. எம் முன்னோரளித்த சதானங்கள் திருநீறும், திருவைந் தெழுத்தும் எனக் கூறினோம். இரண்டும் உயரிய கருத்துக்களுடையன. அவை எம் மத்தியிலிருந்து மறைந்து போவதற்கு எக் காரணமுமில்லை.

தங்கள் வாய் மொழிகளால் சைவ சாதனங்கள் எம் நாட்டில் மங்குதலின்றி என்றென்றும் நிலைபெறுவனவாருக. எம் நாட்டில் நடைபெறும் அரசாங்கம் புத்த அரசாங்கமாகும். எம் நாட்டின் புதினத் தாள்களைப் படிப்பீர்களாயின் புத்தசமயம் அரசாங்க அலுவல் நிலையங்களிலும், கோடு கச்சேரி முதலிய இடங்களிலும் புது உயிர்பெற்று எழுவதை அறிவீர்கள், புத்த சமய எழுச்சியைப்பற்றி நாம் பொறாமைப்படக்கூடாது. ஆனால் எம் நாட்டுச் சைவ இளைஞர்கள் சமரச மனப்பான்மையில் வளர்ந்து வருவாராயின் காலகதியில் அரசாங்க உத்தியோக மோகத்தாலும் அரசாங்க தேவதைகளைப் பிரியப்படுத்த வேண்டும் என்னும் போலி யுணர்வாலும் புத்தர்களாக மாறவும் கூடும் என அஞ்சுகின்றேன். ஏனெனிற் கிறீஸ்தவ பாடசாலைகளில் கடமைபார்த்து வந்த எத்தனையோ சைவ இளைஞர்கள் கிறிஸ்தவர்களாக மாறியதை யாழ்ப்பாணம் நன்கு அறியும். அதனாற்றான் சைவ சாதனங்கள் புத்தகங்களிலும், மேடைகளிலும், பத்திரிகைகளிலும் இருந்தால்மாத்திரம் போதாது என்றும், அவைகள் சைவ இளைஞர்களின் உள்ளத்திலும் தோற்றத்திலும் சுவறவேண்டும் என்றும வற்புறுத்த விரும்புகின்றேன்.

இன்னும் இரு பெரும் விஷயங்கள் எம் நாட்டு இளைஞர்களது உள்ளத்தை அலைத்து வருகின்றன. இப்பொழுது அலைத்துவரும் வேகத்தில் இன்னும் சில ஆண்டுகளுக்கு அலைத்து வருமாயின் சமயங்களின் கதி யாதாகுமோ எனக் கூறவியலாது. ஒன்று மேனாட்டு விஞ்ஞானம், மற்றையது அரசியற் கருத்துக்கள். நானறிந்தவரையில் விஞ்ஞானம் எந்தச் சமயத்திற்கும் முரண்பாடானதன்று. "அது செல்லக்கூடிய அளவிற்குச் செல்லும். பின்னர் செல்லமுடியாது மோதுண்டு பின்வாங்கும்" என்பதே சமயங்கள் அதனைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தாம்.

விஞ்ஞானம் புறப் பொருளுணர்வை (objective consciousness) க் கூர்மைப் படுத்திச் செல்வது. சமயமோ தானாகிய ஆன்மாவைப் பற்றிய உணர்வை (Subjective Consciousness)க் கூர்மைப்படுத்திச் செல்வது. சமயம் ஆன்மாவை நடுவணாக வைத்து நடன மாடுகிறது. ஆன்மாவின் ஒருபால் கண்ணாகிய பொறிக்கு அகப்படும் உலகமென்னும் இன்னொருபால் தானாகிய சைதன்யத்தில் அகப்படும் இறைவனென்னும் கூறுவது. எனவே விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும் எப்பொழுதாவது முரண்பாடு வருமென்று கூறுவதற்கில்லை. முடியுமானால் விஞ்ஞானம் சமய உண்மைகளை அரண்செய்து வைக்கும். விஞ்ஞானம் கூறுகின்ற சில பௌதிக விதிகளை எம் முன்னோர் கூறிய சில ஆத்மீக வுண்மைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பீர்களானால் இந்த உண்மையை உணர்வீர்கள். பொருள்களின் அசைவில் வைத்தே விஞ்ஞானம் சடசக்திக்கு (force) வரைவிலக்கணம் கூறுகிறது உயிருணர்வின் அசைவில்வைத்தே சமயம் சிவசக்திக்கு வரைவிலக்கணம் கூறுகிறது. பொருள்களை ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குச் செலுத்துவதே சக்தி (force) என்று விஞ்ஞானம் கூறும். (Newton இயக்க விதியைப் பார்க்க Force is that which tends to change the state of rest or of uniform motion of a body). உயிருணர்வை ஒரு நிலையிலிருந்து (அவஸ்தை) இன்னொரு நிலைக்குச் செலுத்துவதே சிவசக்தி என்று சமயம்கூறும் (சிவஞானபோதம் 2-ம் சூத்திரம்: போக்குவரவுபுரிய ஆணையின் நீக்கமின்றி நிற்குமன்றே இந்த சிவசக்தி மறைந்துநின்று மறைப்புச் சக்தியாய் உயிரைத் தொழிற்படுத்தும்பொழுது ஆணையென்றும் திரோதாயி என்றும் சொல்லப்படும். இந்தச் சிவசக்தி உயிரறிவில் சாக்ஷாத்கரிக்கும் பொழுது பராசக்தி என்று சொல்லப்படும்). விஞ்ஞானம் கூறும் சடசக்தி யூகத்தினால் அறியப்பட்டதே யன்றி அநுபவத்திற் சித்திப்ப தொன்றன்று. சமயங்கூறும் சிவசக்தியோ யூகத்தினால் யூகிக்கப்பட்டது மாத்திரமன்றி அநுபவிக்கப்படுவதொன்றும். இதனால், சமயத்தின அகன்ற தன்மையையும் விஞ்ஞானத்தின் எல்லைக்குட்பட்ட தன்மையையும் நாங்கள் உணர்கின்றோமல்லவா? விஞ்ஞானம்கூறும் மிக நுண்ணிய வஸ்துக்களான "புரோட்டோன் இலெக்ரோன்" முதலியன கேட்பதற்கு ஒரு புது உணர்ச்சியைத் தருவனவாயிருக்கலாம். ஆனால், உலகத்தின் அடிப்படையான உண்மை யாதென்றுகூறவோ, உலகம் சுட்டும் பொருள்யாது என்று உணர்த்தவோ, அவற்றிற்கு முடியாது. ஆயினும் விஞ்ஞானத்தினால் உலகுக்கு அதிர்ச்சியேற்பட்டிருக்கின்றது என்பதை நான் மறைக்கவில்லை. தானும் தன் பாடுமாய் இருந்த உலகம் திடீரென யந்திரமயமாய் மாறி ஓர் புதுக்காட்சி யளிக்குமாயின், மக்கள் உள்ளத்தில் பெரும் அதிர்ச்சி ஏற்படாதிருமல்லவா? இந்த அதிர்ச்சியிலே அகப்பட்டுக் கலக்கிப்போ யிருக்கும் எம் நாட்டு இளைஞர்களுக்கு ஆத்மீக உணர்வு விரைவில்வந்து பொருந்தவேண்டுமாயின் எக் காலத்திலும் இக் காலத்திலேயே சமய உணர்ச்சியும் சமயப் பற்றும் சமய வாழ்க்கையும் மிகவும் வேண்டும. எக் காலத்திலும் இக் காலத்திலேயே சமயத்திலுள்ள கிரியைகள் - சடங்குகள் - கோயில்கள் முதலியன, அமைதி, அறிவு, தெளிவு, துணிபு உடையவர்களால் நடைபெறுதல் வேண்டும். எக் காலத்திலும இக் காலத்திலேயே எங்கள் செயல்களில் - எங்கள் மந்திரங்களில் - எங்கள் அநுஷ்டானங்களில் - எங்கள் லட்சியப்பொருள் சித்தித்தல் வேண்டும்.

எமது சமயம் இராணுவம்போன்ற கட்டுப்பாடில்லாதது. ஆன்மாவின் இயற்கையான அன்பெனும் குணத்தை அடிப்படையாய்க்கொண்டு நிகழ்வது. மேனாட்டிலிருந்து எம் நாட்டிற்கு வந்திருக்கும் அரசிய லமைப்புக்கள் மிகவும் கூர்த்த மதிகொண்டு அமைக்கப்பட்டன வாயினும், அவை இராணுவம்போன்ற கட்டுப்பாட்டோடு கூடியன. அன்றியும் அன்பெனும் குணத்தை அடிப்படையாய்க் கொண்டெழுந்தனவன்று. அதனால் அவை எம் தேகத்தில் ஓடும் இரத்தத்திற்கும, எம் பாரம்பரியத்திற்கும் முழுவதும் மாறானவை. துவேஷத்தை உயிராய்க்கொண்டு எழுந்த ஓர் அரசியற்கலை. எவ்வளவு கூர்த்த மதியோடு அமைக்கப்பட்ட தொன்றாயினும், எவ்வளவு புத்திக்குப் பெரு விருந்துபோற் தோன்றுவதாயினும், அது தன் அழித்தல் வேலையைச் செய்தேதீரும். துவேஷம் அழிவிலே முடியும்என்பது அநுபவசித்தமல்லவா? அதனாற்றான் எம் முன்னோர்கள் சமூக அமைப்பு அரசியலமைப்பு நிகழ்த்த முன்னர் மக்கள் தெய்வங் கொள்கையில் உறைந்து நிற்கவேண்டு மெனக்கூறினர். தெய்வக்கொள்கை என்னும் அருங்குணம் ஒரு சமூகத்திற்கு வாய்க்குமாயின், உயிர்களிடத்து அன்புடைமையும், அடாதன செய்தலில் நாணுடைமையும், உலகத்தோடொட்ட ஒழுகும் ஒப்புரவுடைமையும் அந்தச் சமூகத்தில் தாமாகவே அமையும். இந்த உயர் நலங்கள் வாய்த்த சமூகம் முடியாட்சிக்குட் பட்டாலென்ன குடியாட்சிக்குட்பட்டாலென்ன அமைதிபெற்றுத் தானாகவே இயங்கும். அரசியலமைப்பு அந்த இயல்பான இயக்கத்திற்குத் துணைசெய்து நிற்குமளவே உதவி செய்யும். தமிழ்மக்கள் சரித்திரத்தைப் பார்க்கும்பொழுது தெய்வங்கொள்கை சிறந்திருந்த காலத்திலேயே மக்கள் அறிவும் அமைதியும் இன்பமும்பெற்று வாழ்ந்திருக்கின்றனர் என அறிகின்றோம்.

ஆகலின் சமயப்பணி செய்துகிடப்பதே வாழ்க்கையின் பெரு இலட்சியமாய்க் கொண்டு ஒழுகும், தாய்நாட்டுச் சைவச் செல்வர்களே! தாய்நாட்டுச் சைவச் செல்வியர்களே! தாய்நாட்டுச் சைவ இளைஞர்களே! வாரீர்! நல் வரவாய் வாரீர்! "ஞாலநின்புகழே மிக வேண்டும் ஆலவாயி லுறையு மெம்மாதியே" என எம் பிரானுர் தந்த வாசகத்தை வாயிலமைத்து, மனத்திற்கொண்டு எழுந்தருளி வாரீர்! ஞாலமுய்ய நாமுய்யச் சைவ நன்னூல்களை எங்கணும் பரப்பிவரும் சைவத் திருவுடையீர் வாரீர்! சைவப் புலவர் தேர்வுகள்வைத்து எம்மையும் எம்முடன் பிறந்த இளைஞர்களையும் மேற்நிலிருந்து அடிக்குற் காற்றிலிருந்து காத்துவரும் சைவக் கவியுடையீர் வாரீர்! தென்னாடுடைய சிவனின் பெருமையை எம் நாட்டவர்க்கு உணர்த்த எழுந்தருளி வாரீர். ஈழத்தில் இன்று இங்குக் கூடியிருக்கும் நாம் 'படிறிலவாம் செம்பொருள் கண்டார், வாய்ச்சொல்லைக் கேட்கும் அவா பெரிது முடையேம். ஆகலின் சைவப் பெருநெறிபற்றி ஒழுகும் எல்லீரும வம்மின்! எம் அல்லல்நீர' அல்லல் தீர்ந்து இன்பம் பெறுக வம்மின்! சிவம் பொலிய வம்மின்! சைவம் ஓங்க வம்மின்!

"ஞாலநின் புகழே மிகவேண்டும்
ஆலவாயி லுறையு மெம்மாதியே!"

—தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.


—தொடர்பான—

## சரித்திரபாடப் புத்தகங்க...

2-ம், 3-ம், 4-ம், 5-ம், வகுப்புக்குரியன

ஆக்கியோன்

ச. ஜெயவீரசிங்கம் B. A. (Hons.)

சரித்திர ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இப்புத்தகங்களை நீங்கள் ஆதரிக்கவேண்டியதற்கு நியாயங்களாவன:

1 வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்துக்கமையும்படி இப் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.
2 இப் புத்தகங்களில் உபயோகமுள்ள பல சித்திரங்களும் வினாக்களும் இருக்கின்றன. ஒவ்வொரு பாடமும் வெகு சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3 உண்மையான சரித்திரமன்றிக் கட்டுக் கதைகள் நீக்கப் பட்டுள்ளன.
4 இப் புத்தகங்கள் இலகுவான நடையி லெழுதப்பட்டன.
5 இப்புத்தகங்களிற் காணப்படும் சிலபாடங்கள் ஆரம்பவகுப்புகளுக்கென எழுதப்பட்ட வேறு புத்தகங்களில் இல்லை.
6 இப் புத்தகங்களின் விலை மிகவும் சகாயமானது. ஆசிரியர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்குந் தாராளமான கழிவு கொடுக்கப்படும்.

பிரதிகள் பிரபல புத்தக வியாபாரிக ளிடமேனும் நூலாசிரிய ரிடமேனும் பெறற்பாலன.

Std 60 19.10-48—14-1-49. (செவ்)



## திரு வே. சிவக்கொழுந்து

அவர்களின் பிரசுரங்கள்.

**ஆரம்பவகுப்பு நூல்கள்**

| | | |
|---|---|---|
| 1 | நாலாந்தரக் கணிதம் (புதியபதிப்பு) | ... விலை ரூ. 1-35 |
| 2 | ஐந்தாந்தரக் கணிதம் (புதியபதிப்பு) | ... விலை ரூ. 1-75 |
| 3 | நாலாந்தரப் பூமிசாஸ்திரம் (7-ம் பதிப்பு) | ... விலை சதம். 80 |
| 4 | ஐந்தாந்தரப் பூமிசாஸ்திரம்(5-ம் பதிப்பு) | ... விலை ரூ. 1-00 |
| 5 | இரண்டாம் மூன்றாம்தரப் பூமிசாத்திரங்கள் | (அச்சில்) |
| 6 | இரண்டாம் மூன்றந்தரக் கணிதங்கள் | ... (அச்சில்) |
| 7 | இரண்டாம், மூன்றாம், நாலாம் ஐந்தாந்தர மனக்கணிதங்கள் | ... (அச்சில்) |

**உயர்தரவகுப்பு நூல்கள்**

| | | |
|---|---|---|
| 8 | ஆறந்தரக் கணிதம் (புதிய பதிப்பு) | ... விலை ரூ. 1-75 |
| 9 | ஏழாந்தரக் கணிதம் (புதிய பதிப்பு) | ... விலை ரூ. 1-75 |
| 10 | தமிழ்ப் பாடிகணிதம் ( 2-ம் பதிப்பு ) | ... விலை ரூ. 3-00 |
| 11 | தமிழ் அக்ஷரகணிதம் (பழையபதிப்பு) | ... விலை ரூ. 1-25 |
| 12. | தமிழ் கேத்திரகணிதம்(பழையபதிப்பு) | ... விலை ரூ. 1-25 |

புதிய பாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பெற்ற மேற்படி நூல்கள் ஆங்கிலகலாசாலைகளில் கல்விபயிலும் தமிழ் மாணவரும் அத்திபாரமான கல்வியறிவைப்பெற உகந்தபாடப் புத்தகங்களாகும்.

*Publishers:*

THE NORTH CEYLON BOOK-DEPOT,
Main Street: Point Pedro.

(Std. 57. 15-9-48 to 30-12-48.)



ஆங்கில தமிழ் எஸ். எஸ்- ஸீ. (S. S. C.) வகுப்பு

## சைவ சமயபாட நூல்கள்

1. **திருவருட் பயன்**
   பேராசிரியர் சு. சிவபாதசுந்தரம் அவர்களெழுதியவிரிவுரையுடன் } விலை சதம் 75 (அஞ 12)
2. **சைவத் திருநெறித் தோத்திரத் திரட்டு**
   விலை சதம் 75 (அஞ 12)
3. **திருக்குறள் 10 (25—35) அதிகாரங்கள்**
   பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை தொகுத்த பதவுரை. கருத்துரை, விசேடவுரை, நூலாசிரியர் வரலாறு என்னுமிவற்றோடு ஆங்கில மொழி பெயர்ப்புஞ் சேர்ந்தன. .... விலை சதம் 75 (அஞ 12)
4. **சமயகுரவர், சந்தானகுரவர், சரித்திரச் சுருக்கம்**
   மேற்படி பண்டிதர் தொகுத்தெழுதியது விலை சதம் 75

சைவப்பிரகாச யந்திரசாலை வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். } மனேஜர்


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவி லாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. KANDIAH, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday December 28, 1948.